1979 ஏப்ரல் 27]

டாக்டர் தே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலும், பேரூராட்சி ஒன்றியங்களிலும் தரக் கூடிய மின்சார சாதனங்கள் தரம் அற்றவையாக இருக்கின்றன என்பது பற்றி சர்க்காருக்கு தெரியுமா? அப்படியானால் நல்ல தரமான சாதனங்கள் தருவதற்கும், தெரு விளக்குகள் அடிக்கடி கெட்டுப் போய் விடுவதை ரிப்பேர் செய்வதற்கும், இந்த காலத் திற்குள் அதை ரிப்பேர் செய்து முடிக்க வேண்டும் என்ற அள வுக்கு உத்தரவுகள் பிறப்பிக்க அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதையெல்லாம் அரசு பரிசீலிக்கும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர் களே, ஊராட்சிகளிலும் சரி, பஞ்சாயத்துக்களிலும் சரி தெருக் களில் லைட் எரிவது கிடையாது. பஞ்சாயத்துக்களில் கொடுக்கக் கூடிய நிதி ஒதுக்கீட்டிலே நிர்வாக செலவிற்காக பெரும்பகுதி போய்விடுகிறது. அதனால் மராமத்து செலவுகளுக்கு பணம் போதவில்லை என்று சொல்கிறார்களே, அவர்களுக்கு பணம் ஒதுக்கீடு செய்யும்போது எத்தனை சதவீதம் நிர்வாக செலவிற்கு ஒதுக்கப்படுகிறது, எவ்வளவு சதவீதம் பராமரிப்பு செலவிற்கு ஒதுக்கப்படுகிறது; அதற்குரிய பஞ்சாயத்து சட்டப்படி நிர்வாக செலவிற்கு எவ்வளவு ஒதுக்கப்பட வேண்டும் என்று சொன்னால் பராமரிப்பு செலவுக்கு தனியாக ஒதுக்கப்படலாமே, இவைகளை பற்றியெல்லாம் விரிவாக விளக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தனிக் கேள்வி போட்டால் விரிவாக பதில் தயாரித்து கொடுக்கப்படும்.

புதுக்கடை சந்தைக் குடிநீர் தேக்கத் தொட்டி.

*வினா எண். 852.—திரு. தே. ஞானசிகாமணி; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் புதுக்கடை சந்தை யினுள் பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து குடிநீர் வசதிக்காக தோண்டப்பட்ட கிணறும், குடிநீர் தேக்கும் மேல் நிலைத் தொட்டியும் பயனற்றுப் போயுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்தக் குடிநீர் திட்டத்தை மீண்டும் செயல் படுத்த அரசு என்ன திட்டமிட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) புதிய திட்டம் ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. தே. ஞானசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொட்டி கட்டப்பட்டு ஒரு சில ஆண்டுகளேயாயினும் கூட அது கெட்டுப் போவதற்குக் காரணம் சரியான முறையில் வேலை செய்யப்படுவதை கண்காணிப்பாளர் கண்காணிக்கப்படாததேயாகும் என்று பேசப்படுகிறது. அது பற்றிப் பரிசீலிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொட்டி 1968–69 ஆம் ஆண்டு வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் 65,818.95 ரூபாய் செலவில் நெடுஞ்சாலைத்துறையினரால் கட்டப்பட்டது. தேவையான தண்ணீர் கிடைக்காததால் இத் திட்டம் தற்போது செயல்படவில்லை, அதோடு இக் கிணற்றைப் பயன்படுத்தவும் இயலாது. ஆனால், மேல்நிலைத் தொட்டியும், பம்பு அறையும் நல்ல நிலையில் உள்ளதால் அவைகளைப் பயன்படுத்தும் முறையில் அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்தில் தண்ணீர் சப்ளைக்காக வழங்கப்படுகிற இப்படிப்பட்ட தண்ணீர்த் தொட்டிகள் 100க்கு 50க்கு மேல் இப்படி பழுது அடைந்து விடுகிறது, இதனால் தண்ணீர் சப்ளை நிறுத்தப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுவதாகத் தெரிகிறது. அதனால், அதை சப்ளை செய்த காண்டிராக்டர்களின் மீது நடவடிக்கை எடுக்கவும் மீண்டும் புதிதாகத் தண்ணீர்த் தொட்டிகளை சப்ளை செய்யவும் நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் புகாரைப் பொதுவாக சொல்கிறார்கள், எங்கே எந்த இடத்தில் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அது பற்றி அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.